**கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட தேசிய நூல் நிலைய மற்றும் தகவல் விஞ்ஞான நிறுவகம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக்கொண்ட தகவல்களுக்கும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, தேசிய நூல் நிலைய மற்றும் தகவல் விஞ்ஞான நிறுவகம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக உரிய கணக்கேடுகளைப் பேணியுள்ளது எனவும், இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் நிதிக் கூற்றுக்களில் விளையும் தாக்கத்தைத் தவிர தேசிய நூல் நிலைய மற்றும் தகவல் விஞ்ஞான நிறுவகத்தின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைப்பாட்டினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது செயற்பாட்டு விளைவுகளையும் காசுப்பாய்ச்சலையும் உண்மையாகவும் நேர்மையாகவும் காட்டும் வண்ணம் நிதிக் கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 99 ஆம் பிரிவு மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவரின் 2003 சனவரி 13 ஆம் திகதிய யூஜீசீ/எப்ஏ/ஜீஎச்/2002 ஆம் இலக்க கடிதத்திற்கு முரணாக நிறுவக வருமானத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டியிருந்த 2008 ஆம் ஆண்டு வரை சேகரிக்கப்பட்ட பாடநெறிக் கட்டணங்கள் வருமானத்தின் ஓர் பகுதியை உருவாக்கப்பட்ட ‘‘அபிவிருத்தி நிதியத்தில்’’ ரூபா 673,198 தொகை பயன்படுத்தப்பட்டு மீளாய்வாண்டின் போது நிலையான சொத்துக்கள் கொள்வனவு

செய்யப்பட்டிருந்ததுடன் அப் பெறுமதி பொது ஒதுக்கத்திற்குச் சீராக்கப்படுவதற்குப் பதிலாக ‘‘ அரசாங்கத்தின் மூலதன மானியக்’’ கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) நூலக மற்றும் தகவல் முகாமைத்துவம் தொடர்பான இடைக்காலச் சான்றிதழ் பாடநெறி மற்றும் தகவல் முகாமைத்துவப் பாடநெறி என்பன 09 (Intermediate Certificate in Library& Information Management 09) இற்காக மீளாய்வாண்டின் போது பெற வேண்டிய வருமானம் ரூபா 16,710 எதிர்வரும் காலத்திற்காகப் பெறப்பட்ட பாடநெறி வருமானத்திற்கு சரி செய்யப்பட்டு காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 4.2.6 ஆம் பந்தியின் பிரகாரம் காலாண்டு செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் மீளாய்வு

### 2.1.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக நிறுவகத்தின் தொழிற்பாடுகளின் நிதிசார் விளைவுகள், மீண்டெழும் செலவிற்கான அரசாங்க மானியத்தைக் கணக்கிற்கு எடுத்துக் கொள்ள முன்னர் ரூபா 8,430,218 பற்றாக்குறையான அதேவேளை, இதனோடொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 7,670,113 ஆகும். மீளாய்வாண்டின் மீண்டெழும் செலவினத்திற்காகப் பெறப்பட்ட ரூபா 5,855,000 ஆன அரசாங்க மானியத்தின் காரணமாக இப்பற்றாக்குறை ரூபா 2,575,218 ஆகக் குறைந்திருந்ததுடன் முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்திற்காகப் பெறப்பட்ட ரூபா 5,497,000 அரசாங்க மானியத்தின் காரணமாக அப் பற்றாக்குறை ரூபா 2,173,113 வரை குறைவடைந்திருந்தது.

## 2.2 செயற்பாடு மீளாய்வு

### 2.2.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) உலக வங்கியின் இரண்டாவது பொதுக் கல்விச் செயற்திட்ட உதவியின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ள தேசிய நூல் நிலைய மற்றும் தகவல் விஞ்ஞான நிறுவகத்தின் மூல நோக்கம் வருடாந்தம் 300 – 400 இற்கும் இடையிலான மாணவர்களுக்கு பயிற்றுவிப்பதாகும். பாடநெறி ஆரம்பிக்கப்பட்ட 2003 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரை பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை இதனைப் பார்க்கிலும் குறைவாகக் காணப்பட்டதுடன் இதிலும் குறிப்பிடத்தக்க அளவு தொகையினர் பாடநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தியாக்கியிருக்கவில்லை.

| **ஆண்டு** | **பாடநெறி எண்ணிக்கை** | **பதிவாகிய மாணவர்களின் எண்ணிக்கை** | **பாடநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தியாக்கிய மாணவர்கள்** | |
|---|---|---|---|---|
| 2004.12.31 வரை | 09 | 344 | 201 | 58% |
| 2005 | 08 | 191 | 80 | 42% |
| 2006 | 06 | 133 | 70 | 53% |
| 2007 | 10 | 215 | 96 | 45% |
| 2008 | 06 | 178 | 114 | 64% |
| 2009 | 03 | 111 | 63 | 57% |
| | 02 | 16 | பாடநெறியைப் பூர்த்தியாக்கியிருக்க வில்லை. | - |
| 2010 | 07 | 102 | மேற்படி | - |

(ஆ) வருடாந்த செயலாற்றல் திட்டத்தில் செயற்படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட பின்வரும் 06 செயற்பாடுகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(i) வருடாந்த மாநாடு ( NILIS Symposium)

(ii) சிறிய அளவிலான ஆராய்ச்சிச் செயற்திட்டங்கள் 03 இனைச் செயற்படுத்தல்.

(iii) பிரசாரத்திற்காக விபரப் பத்திரத்தை பகிர்ந்தளித்தல்.

(iv) இலத்திரனியல் சஞ்சிகைகள் (E- Journal) தயாரித்தல்

(v) தொலைக்கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்கல்

(vi) இலங்கை நூலகச் சங்கத்துடன் நடாத்தப்படும் ஒத்துழைப்பு நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்கல்.

(இ) நிறுவகத்தினால் நடாத்தப்பட்டுவரும் 06 பாடநெறிகள் குறித்த காலத்திற்குள் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. தாமதக் காலம் 02 மாதங்கள் முதல் 01 வருடமும் 05 மாதகாலத்திற்கு இடையில் காணப்பட்டது.

**2.3 முகாமைத்துவ திறமையீனங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

**2.3.1 சுனாமி நிகழ்ச்சித்திட்டம்**

நூலககத் துறையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக கனடா நூலக சங்கத்தினூடாக 2007 ஒக்டோபர் 5 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்த ரூபா 533,000 தொகை உரிய செயற்பாடுகளிற்கு பயன்படுத்தாமல் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு 03 ஆண்டுகளுக்கும் அண்மித்த காலமாக வங்கி நடைமுறைக் கணக்கொன்றில் விளைவற்றுக் காணப்பட்டது.

**2.3.2 இருப்பு மற்றும் நிலையான சொத்துக் கட்டுப்பாடு**

(அ) பொருட் பெறுவனவு மற்றும் வழங்கல் பத்திரங்கள் பயன்படுத்தலும், இருப்புப் புத்தக கண்காணிப்பும், வருட இறுதியில் இருப்புப் புத்தகம்

தீர்க்கப்பட்டிராததுடன் பௌதீக இருப்பு மீதியே இருப்புப் பதிவேட்டின் மீதியாக மீளாய்வு அறிக்கையில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட வேண்டிய காலப்பகுதி பொருள் மெய்மையாய்வு சபை நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(இ) 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்கம் மற்றும் 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஜ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேடு மற்றும் கணனி, உதிரிப் பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான பதிவேடு எனபன பேணப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் இறுதியில் கணனி, உதிரிப் பாகங்கள் மற்றும் மென்பொருட் கிரயம் ரூபா 7,383,559 ஆகவும் நூலகப் புத்தகங்கள் தவிர்ந்த ஏனைய நிலையான சொத்துக் கிரயம் ரூபா 13,551,498 ஆகக் காணப்பட்டது.

(ஈ) நி.பி. 756 இன் பிரகாரம் புத்தகங்கள் மற்றும் வார சஞ்சிகைகள் தொடர்பாக பொருள் மெய்மையாய்வு ஒன்று நிறுவகத்தின் ஆரம்பம் முதல் மீளாய்வாண்டின் இறுதி வரை மேற்கொள்ளப்பட்டிராததுடன் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான புத்தக இருப்புக் கிரயம் ரூபா 6,878,681 ஆகக் காணப்பட்டது.

(உ) 2010 யூன் 30 ஆம் திகதிய கைதவிர்க்கப்பட்ட பொருட்களின் ஏலவிற்பனையின் போது விற்பனை செய்யப்பட்ட 07 கணனி மொனிடர்களின் பெறுமதி கணிப்பிடப்பட்டு அவை கணக்குகளில் இருந்து அகற்றப்படுவதற்கும் பதிவுப் பொருட் பதிவேட்டில் பதியப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) பழுதுபார்க்கப்பட வேண்டிய, விற்பனை செய்யப்பட வேண்டிய மற்றும் அழிக்கப்பட வேண்டியதாகப் பரிந்துரைக்கப்பட்ட 18 அலகுப் பொருட்கள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.3 நிதிக் கட்டுப்பாடு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நிதிப் பிரமாணம் 395(எச்) பந்திக்கு மாறாக நாளாந்தப் பெறுவனவுகள் வங்கியில் இடப்படல், காசேடு பேணல் மற்றும் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தயாரித்தல் போன்ற சகல செயற்பாடுகளும் ஒரே உத்தியோகத்தரினாலேயே மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஆ) காசுப் பெறுவனவு குறித்த நாளில் காசேட்டில் பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) காசேட்டில் போதியளவு பணம் இல்லாத போதிலும் காசோலைகள் வரையப்பட்டிருந்தது.

(ஈ) பெறப்பட்டிருந்த காசுக்கட்டளைகள் தாமதமின்றி தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 போதிய அதிகாரத்தால் உறுதிப்படுத்தப்பட்டிராத கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 89 ஆம் பிரிவு, 1959 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டத்தின் 47 ஆம் பிரிவு 1988 இன் 47 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதிய அதிகாரச்சட்டத்தின் 16(2) ஆம் பிரிவு என்பவற்றிற்கு முரணாக பல்கலைக்கழக சேமலாப நிதியம், ஓய்வூதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு பங்களிப்புத் தொகை கணிப்பிடப்படுகையில் ‘‘கல்விசார் படிகள்’’ கருத்திற்கொள்ளப்பட்டிருந்த காரணத்தினால் உரிய நிதிக்காக ரூபா 96,309 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2002 ஒக்டோபர் 25 ஆம் திகதிய பீஙீ/பீஎப்/1/174/1 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கு முரணாக மொழித் தேர்ச்சிப் படிப்பணமாக ரூபா 20,190 செலுத்தப்பட்டிருந்தது.

**2.5 கூட்டுத்திட்டமும் செயற்பாட்டுத் திட்டமும்**

-----------------------------------------------------------

நிறுவகத்தின் கூட்டுத்திட்டமும் செயற்பாட்டுத் திட்டமும் 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிராததுடன் இது ஓர் கட்டுப்பாட்டுச் சாதனமாகவும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.6 பாதீட்டுக் கட்டுப்பாடு**

--------------------------------

03 பாடநெறிகளின் பாதீடிடப்பட்ட செலவினத்திற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையில் 65% முதல் 82% இடையிலான முரண்கள் அவதானிக்கப்பட்ட காரணத்தினால் பாதீடு ஆக்கபூர்வமானதோர் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

------------------------------------------------------

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) நிதிக்கட்டுப்பாடு
(ஆ) கணக்கீடு
(இ) இருப்பு
(ஈ) நிலையான சொத்துக்கள்
(உ) செயலாற்றல்
(ஊ) திட்டமிடல்